## தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் ஜீலை (09)

## பள்ளி மற்றும் கல்லூரிகளில் தூய்மைப் பணி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

தூய்மையான நகரங்களுக்கான மக்கள் இயக்கம் அனைத்து தர மக்கள் பங்களிப்புடன் 2022 ஜீன் 3–ஆம் தேதி அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் துவக்கப்பட்டு, வெற்றிகரமாக செயல் படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட ஆறு வகையான தலைப்புகளில் இதன் செயல்பாடுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஜீலை மாதம் 2–வது சனிக்கிழமை அதாவது 09.07.2022 அன்று **பள்ளி மற்றும் கல்லூரிகளில் தூய்மைப் பணி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**_என்ற தலைப்பின் கீழ் உள்ள அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

கீழ்க்கண்ட அறிவுரைகளை பின்பற்றி இப்பணிகளை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

- மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட கல்வி அலுவலர், உயர்கல்வி இணை இயக்குநர், அனைத்து தலைமையாசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள் ஆகியோருடன் ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்த வேண்டும்.
- பள்ளி தலைமையாசிரியர் மற்றும் கல்லூரி முதல்வர்களுடன் முன்பே கலந்து ஆலோசித்து அனைத்து நடவடிக்கைகளையும் திட்டமிடல் வேண்டும்.
- பள்ளிகளில் 11–ம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்களை தூய்மைப் தொடர்பான களப்பணியில் ஈடுபடுத்த வேண்டும்.

- தூய்மை குறித்த விழிப்புணர்வு மற்றும் தூய்மை பற்றிய போட்டிகளில் அந்தந்த வயதுக்கேற்ப அனைத்து மாணவர்களையும் ஈடுபடுத்தலாம்.
- இத்தூய்மைப் பணியில் அந்தந்த நகரங்களில் உள்ள தன்னார்வலர்களை கண்டறிந்து, 4 தெருக்களுக்கு ஒரு தன்னார்வலர் என்ற முறையில் பிரித்து, வீடு வீடாகச் சென்று கப்பையை பிரித்து கொடுக்க ஊக்கப்படுத்தும் பணியில் ஈடுபடுத்த வேண்டும். இவர்கள் ஒவ்வொரு 2வது மற்றும் 4வது சனிக்கிழமைகளிலும் பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும். 6 தலைப்புகளானப் பணிகள் முடிவடைந்ததும், அதில் சிறப்பாக பணியாறிறிய தன்னார்வலரை பரிசு கொடுத்து அங்கீகரிக்கவும்.
- **"எனது குப்பை எனது பொறுப்பு"** என்ற வாசகத்தை அனைத்து விழிப்புணர்வு பயணங்கள் மற்றும் செயல்விளக்கங்களில் மாணவர்களிடையே பெருமளவில் பிரபலப்படுத்தப்பட வேண்டும்.
- தூய்மை உறுதி மொழியுடனே அனைத்து செயல்பாடுகளும் துவங்கப்பட வேண்டும்.
- பள்ளி கல்லூரிகளில் **தூய்மை குறித்த உரை (Sanitation talk)** நிகழ்த்த சுகாதார அலுவலர் / சுகாதார கண்காணிப்பாளர், சுகாதாரப்பணியாளர், பரப்புரையாளர் அடங்கிய குழுக்களை அமைக்க வேண்டும்.
- சுகாதார உரையில் கீழ்க்கண்ட பொருள்கள் அடங்கிய உரை நிகழ்த்தப்பட வேண்டும்.
    - ❖ குப்பையை பிரித்துக் கொடுப்பது,
    - ❖ சமுதாய மற்றும் பொது கழிப்பிடங்களை தூய்மையாக பயன்படுத்துவது, (Toilet behavior)
    - ❖ பொது இடங்களில் குப்பை கொட்டாமல் இருப்பது,
    - ❖ பொது இடங்களில் எச்சில் துப்பாமல் இருப்பது,
    - ❖ பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதை தவிர்ப்பது,

❖ துணிப்பை உபயோகப்படுத்த ஊக்கப்படுத்துவது

- குப்பைகளின் அனைத்து பிரிவு குறித்து, அதாவது மக்கும் குப்பை, மக்காகுப்பை, மின் கழிவு குப்பை, வீட்டு உபயோக அபாகரமான கழிவு மற்றும் சானிட்டரி கழிவுகளை எவ்வாறு பிரிப்பது மற்றும் அதனை குப்பை சேகரிக்கும் பணியாளரிடம் கொடுப்பது குறித்து தகுந்த மாதிரிப் பொருட்களுடன், செயல்விளக்கம் மூலம் விளக்கிட வேண்டும்.
- பள்ளியிலும் அவர்களது வீட்டிலும் உள்ள மக்கும் குப்பைகளை எவ்வாறு உரமாக மாற்றலாம் என்பது குறித்து கட்டாயம் செயல் விளக்கம் காண்பிக்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு மாணவரும் குப்பையை அவரவர் வீட்டில் பிரித்துக் கொடுக்கின்றார்களா என்பதை கேட்டறிந்து, இனி அதனை கண்காணிக்க அவரை ஊக்கப்படுத்த வேண்டும்.
- ஒவ்வொரு **மாணவருக்கும்** மக்கும் குப்பை மற்றும் மக்கா குப்பையை பிரித்துக் கொடுக்க ஏதுவாக **இரண்டு குப்பை கூடைகள், CSR நிதிமூலம்** ஏற்பாடு செய்து கொடுத்திட வேண்டும்.
- பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களை சிறு குழுக்களாக பிரித்து அவர்களை நுண்உர செயலாக்க மையம், மீள் பயன்பாட்டிற்கான சேகரிப்பு மையம், பயோ மெத்தனேடின் மையம், குப்பைக்கிடங்கு மற்றும் பையோமைனிங் இடங்களுக்கு அழைத்து செல்ல வேண்டும்.
- வீட்டில் பிரித்துக் கொடுக்கப்படும் ஒவ்வொரு வகை குப்பையும் எவ்வாறு செயலாக்கம் செய்யப்பட்டு மறு உபயோகப்படுத்தப்படுகிறது மற்றும் நீக்கப்படுகிறது என்பதை தெளிவாக விளக்க வேண்டும்.
- குப்பையை பிரித்துக் கொடுப்பதால், அதனை செயலாக்கம் செய்வது எளிதாக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தி அதற்காக அரசினால் எடுக்கப்படும் தீவிர நடவடிக்கைகளை விவரிக்க வேண்டும்.

- **3** Reduce, Reuse, Recycle குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
- பள்ளி, கல்லூரி மற்றும் விடுதி வளாகங்களில், துவக்கத்தில் வளாகத்திலேயே குப்பையை உரமாக்கும் செயலுக்கு, தகுந்த தொழில்நுட்ப ஆலோசனைகளை அந்தப்பகுதி சுகாதார அலுவலரோ, சுகாதார கண்காணிப்பாளரோ வழங்கிட வேண்டும். உரத்தை வளாகத்தில் உள்ள செடிகள், மரங்களுக்கு உபயோகப்படுத்திட ஊக்கப்படுத்த வேண்டும்.
- அது குறித்த சந்தேகங்களை விளக்க, பொறுப்பு அலுவலர் ஒருவரை நியமித்து, அலுவலரின் தொலைபேசி எண்ணை தொடர்பு எண்ணாக கொடுக்க வேண்டும். தொலைபேசி உரையாடல் மூலமோ அல்லது Whatsapp பதிவின் மூலமோ அவர்களது சந்தேகங்களை நிவர்த்தி செய்திட வேண்டும்.
- மாணவர்கள் அவர்களது பள்ளி, கல்லூரி மற்றும் விடுதி வாளகத்தில் உள்ள கழிப்பறைகளை எவ்வாறு தூய்மையாக உபயோகப்படுத்த வேண்டும் (Toilet behavior) அதனால் சுகாதாரம் பாதுகாக்கப்படுவது மேலும் தூய்மைப்பணியாளரின் பணியும் எளிதாக்கப்படுவது போன்றவை குறித்து எடுத்துரைக்க வேண்டும்.
- பொது இடங்களில் உள்ள சமுதாய மற்றும் பொது கழிப்பிடங்களையும் தூய்மையாக உபயோகப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்.
- அருகிலுள்ள பொது மற்றும் சமுதாய கழிவறைகளை Google செய்து தெரிந்து கொள்ளலாம் என்ற விபரத்தை தெரிவிக்க வேண்டும்.
- பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களில் உள்ள தன்னார்வலர்களின் மூலம் சைக்கிள் பேரணி, சிறிய அளவிலான மாரத்தான் ஓட்டம், நடைப்பயணம் ஆகியவற்றை ஏற்பாடு செய்து குப்பையை பிரித்துக் கொடுப்பது மற்றும் இதர திடக்கழிவு மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

- பொது இடங்களை சுத்தம் செய்யும் பணியின் போது மாணவர், தன்னார்வலர்களின் (Student Volunteers) பங்கு குறித்து அவர்களுக்கு சிறு பயிற்சி அளிக்கலாம்.
- பள்ளிகளில் சுவர்களை முழுமையாக சுத்தம் செய்து வெள்ளை அடித்து, தூய்மை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் சுவர் ஓவியங்களை வரைய வேண்டும்.
- நுண்கலை கல்லூரிகளில் உள்ள தன்னார்வலர்களை கொண்டு நகரின் பழமையான கட்டடம், மேம்பாலங்கள் மற்றும் பொது இடங்களில் வண்ண ஓவியங்கள் வரையச் செய்தல்.
- அம்மாணவர்களுக்கு அதற்கு தேவையான பொருட்களை ஏற்பாடு செய்து அந்த நகர்ப்புற உள்ளாட்சியின் பொறுப்பாகும்.
- திடக்கழிவு மேலாண்மை மற்றும் தூய்மை பற்றிய ஓவியம் வரைதல், போஸ்டர்கள் தயாரித்தல், அழகிய பொருத்தமான வாசகங்கள் உருவாக்குதல் குறித்து அனைத்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு போட்டி நடத்தி அதில் சிறப்பான பதிவுகளுக்கு பரிசு கொடுத்த ஊக்கப்படுத்தலாம்.
- 11–ம் வகுப்புக்கு மேற்பட்ட அனைத்து மாணவர்களும் அவர்கள் தொலைபேசியில், Swachhta app பதிவிறக்கம் செய்து அவர்களது சுற்றுப்புறத்தில் தூய்மைப்பணியில் ஏதும் குறைபாடு இருந்தால், அதன் மூலம் தெரிவிக்க ஊக்கப்படுத்தலாம். அக்குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்ட பின் அவர்களது நேர்மறையான கருத்தையும் பதிவிடவும் அறிவுறுத்த வேண்டும்.
- ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சியின் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சமூக ஊடகங்களை, அனைத்து மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் ட்விட்டர், முகநூல் பக்கங்களை **(Twitter & facebook: 'Maws**

**Tamilnadu, Swachh Bharat TN)** பின்பற்றி ஆக்கப் பூர்வமான கருத்துகளையும், பதிவுகளையும் பதிவிட செய்ய வேண்டும்.

- மாணவர்கள் அவர்கள் வீட்டிற்கு அருகில் உள்ளவர்கள் மற்றும் உறவினர்களை, Swachhtha app, பதிவிறக்கம் செய்ய ஊக்கப்படுத்தி அதன்மூலம் எவ்வாறு தங்களது குறைகளை தெரிவிக்கலாம் என்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஊக்கப்படுத்தலாம்.
- விடுதலைப்போராட்ட தியாகிகளின் சிலைகள் மற்றும் நினைவு பூங்காங்களை NCC/NSS மாணவர்கள் கொண்டு சுத்தம் செய்து தூய்மையாக வைக்கலாம்.
- பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் தூய்மைப்பணியில் சிறப்பாக செயல்படும் நிறுவனங்களுக்கு பரிசுகள், கோப்பைகள் கொடுத்து அவர்களது பணியை ஊக்கப்படுத்தலாம்.
- இப்பரிசினை, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிகள், மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி ஆணையர் மூலம் கொடுத்து ஊக்கப்படுத்தலாம்.
- இத்தூய்மைப்பணியில் சிறப்பாக செயலாற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதரப் பணியாளர்களையும் பரிசு, கோப்பைகள் கொடுத்து அவர்களது பணியை அங்கீகரிக்கவும்.
- நகராட்சி அளவில் மாணவர்களுக்கு 3 பரிசுகளும், ஆசிரியர் மற்றும் இதர பணியாளர் பிரிவில் 3 பரிசுகளும், பள்ளிகள் பிரிவில் 3 பரிசுகளும், கல்லூரி பிரிவில் 3 பரிசுகளும், ஏற்படுத்தி மாதம் ஒருமுறையோ மூன்று மாதத்திற்கு ஒருமுறையோ கொடுத்து பணியை ஊக்கப்படுத்தலாம்.
- அனைத்து நடவடிக்கைகள் மற்றும் செயல் விளக்கங்களை தேதி, நாள் **(Geo tagged)** போன்ற விவரங்களுடன் அடங்கிய புகைப்படங்களை எடுத்து ஆவணப்படுத்த வேண்டும்.

- அனைத்து செயல்பாடுகளையும் **Swachhtam portal–ல் உள்ள IEC** பிரிவில் தவறாமல் பதிவேற்றம் செய்ய வேண்டும். **இது கட்டாயம் ஆகும்.**
- அனைத்துப்பிரிவு செயல்பாடுகளும் **சரியான தலைப்பு (topic) மற்றும் விபரம் (Description**) கொடுத்து **Swachhtam portal** – ல் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
- இப்பதிவுகள் பதிவேற்றம் **(uploading)** செய்யப்படுவதை அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி ஆணையரும் உறுதிப்படுத்த வேண்டும்.
- ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் 2 அல்லது 3 புகைப்படங்களை அதிக தெளிவுடையவை (High resolution) எடுக்கப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநரின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- அனைத்து இடங்களில் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் செய்தித்தாள், உள்ளூர் தொலைக்காட்சி சமூக வலைதளையங்களின் மூலம் மக்களை சென்றடையச் செய்ய வேண்டும்.
- பணியின் போது தூய்மைப்பணியாளர்கள் மற்றும் மாணவர் தன்னார்வலர்களுக்கு தேநீர், சிற்றுண்டி போன்ற ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம் **குப்பையை பிரித்து கொடுப்பதை பற்றி விழிப்புணர்வு** ஏற்படுத்துவது மற்றும் அதற்கான **மன மாற்றத்தை** பெருமளவில் மக்களிடையே கொண்டு வருவதே ஆகும். அதனை வலியுறுத்தும் வகையிலே அனைத்து செயல்பாடுகளும் அமைக்கப்பட வேண்டும்.